## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 396/2015**

திரு. வேல்முருகன் (D.W –2) **19.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து இரண்டு பட்டியலிட்ட சொத்துக்கள் என்றால் சரி ஒரு சொத்து க.ச.எண்.385/3 இ மற்றொன்று க.ச.எண். 386/1 என்றால் சரி. அந்த சொத்துக்களை 1,2 வாதிகள் தனிப்பட்ட கிரைய ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி. அவர்கள் அவ்வாறு கிரையம் பெற்ற பிறகு அந்த சொத்துக்களை 1,2 வாதிகள் சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களை எனக்கு கிரயம் செய்து கொடுத்தது 4 ம் பிரதிவாதி நாகவிஜய் என்றால் ஆமாம்.

2. நான்காம் பிரதிவாதிக்கு முருகானந்தம் கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். முருகானந்தம் தாவா சொத்துக்களை ஒரு சண்முகம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரி. கிரைய ஆவணத்தில் 1,2 வாதிகளின் பொது அதிகார முகவர் கையொப்பம் செய்து கொடுத்ததாகத்தான் சரத்துக்கள் உள்ளது என்றால் சரி. முதலில் தாவா சொத்துக்களை மணிவண்ணன் உஷா கிரயம் பெற்றது அடிப்படையில் அவர்கள் உரிமையாளர்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும்.

3. அந்த உரிமையின் அடிப்படையில் 1,2 வாதிகள் தாவா சொத்துக்களை கிரயம் பெற்ற தேதியில் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அந்த சமயத்தில் அனுபவம் செய்து வந்தார்கள். தாவா சொத்துக்களை நான் கிரயம் செய்வதற்கு முன்பே 2007 ஆம் வருடம் வாதிகள் இந்த வழக்கை கோயம்புத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதன் பிறகு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றமடைந்தது என்றால் சரி. அந்த வழக்கு சங்கதிகள் அந்த வழக்கில் வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன்.

4. தாவா வழக்குரையில் 1,2 வாதிகள் 1,2 பிரதிவாதிகள் அவர்களை ஏமாற்றி 24.05.2001 தேதியில் சண்முகம் பெயரில் பொது அதிகார ஆவணம் பெறப்பட்டதாகவும் அதை வாதிகள் 14.02.2002–ம் தேதி ரத்து செய்து விட்டதாக சொல்லி உள்ளார்கள். அது தெரியுமா என்றால் தாவா வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. அதை தெரிந்து கொண்டேன். நான் வழக்கறிஞராக பணியில் உள்ளேன் என்றால் ஆமாம். பதிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். வாதிகள் சண்முகத்திற்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தை நீக்குரவு செய்து விட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு சண்முகத்தை பார்த்து அந்த விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். சாட்சி தன்னிச்சையாக முன்வந்து அவர் கிரயம் பெற்ற சமயத்தில் தாவா தள்ளுபடி செய்யப்பட்டு இருந்ததாக கூறுகிறார். அதன் பிறகு வழக்கு மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி.

5. வா.சா.ஆ–3 மற்றும் 4 ஆவணங்கள் தான் 1,2 வாதிகள் ஏற்படுத்திக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல்கள் என்றால் சரி. சண்முகத்தை பார்த்து வாதிகளுக்கு அவர் உறவா என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா? தெரிந்துகொள்ளவில்லை. பொது அதிகார ஆவணத்தில் சொத்துக்களை நேரில் இருந்து பராமரிக்க முடியவில்லை என்பதால் பொது அதிகாரம் கொடுக்கப்பட்டதாக சரத்துக்கள் உள்ளது என்றால் சரி. அதற்கு அடுத்த வரியில் சொத்துக்களை விலை பேசுவதற்கும் கிரயம் செய்து கொடுக்கவும் என்று சொல்லப்பட்டுள்ளது.

6. சண்முகத்திடம் பொது அதிகார ஆவணங்கள் ஏற்பட்ட போது 1,2 வாதிகளுக்கு சொத்துக்களை பராமரிக்க முடியாமல் போனதற்கு உடல்நிலை காரணமா அல்லது வேறு என்ன காரணம் என்பதை எல்லாம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட போதும் அதன் பிறகும் 1,2 வாதிகள் தொடர்ந்து தாவா சொத்தில் இருந்து திருப்பூரில் வசித்து வந்தார்கள் என்றால் சரி. திருப்பூரில் வசித்து வந்தார்கள். பொது அதிகார ஆவணத்தில் வாதிகளுக்கு எந்த பிரதி பிரயோஜனமும் பெற்றுக் கொள்ளவில்லை என்று சரத்துக்கள் உள்ளது என்றால் சரி. ஒரு பொது அதிகார முகவர் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் ஆவணங்களை மேற்கொண்டால் அதற்காக பெரும் தொகை மற்றும் அதற்குரிய கணக்குகளை உரிமையாளருக்கு சட்டப்படி ஒப்படைக்க வேண்டும் என்றால் சரி.

7. சண்முகத்திடம் 1,2 வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து ஏதேனும் ரசீதுகள் கொடுத்தார்களா அல்லது சண்முகம் அவர்களிடம் ரசீது ஏதேனும் பெற்றுக் கொண்டாரா என்பதை எல்லாம் விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தை முருகானந்தம் கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் மின் கட்டண விவரங்கள் எதுவும் முருகானந்தம் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் தவறு. முருகானந்தம் பெயரில் பட்டா மாற்றம் அடைந்துள்ளது. தாவா சொத்தில் உள்ள கிணற்றுக்கான மின் இணைப்பு எண்572 என்றால் சரி. சாட்சி தனிச்சையாக முன்வந்து அந்த மின் இணைப்பு இலவசம் மின் இணைப்பு என்று கூறுகிறார். அந்த மின் இணைப்பு நான் கிரயம் பெறும் வரை வாதி மணிவண்ணன் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் தெரியாது.

8. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மின்சார வாரியம் 11.6.2019 ஆம் தேதி என் பெயரில் மின்னிணைப்பை மாற்றம் செய்வதற்கான உத்தரவு என்றால் சரி. அது வா.சா.ஆ– 65. அந்த உத்தரவில் அதற்கு முன்பு வரை மின் இணைப்பு மணிவண்ணன் பெயரில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வாதிகள் மீது நான் அசல் வழக்கு எண்.231/2022 தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கின் வழக்குரையில் தாவா சொத்தை நான் கிரயம் பெற்ற பிறகு 1,2 வாதிகள் அந்த சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதாகவும் அதை காலி செய்வதற்காக அவர்களிடம் பேசி ரூ.2,50,000/– கொடுப்பதாக சொன்னேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அவ்வாறு ரூ.2,50,000/– கொடுத்தீர்களா என்றால் ரூ.1,50,000/– கொடுத்தேன். அதற்கு ரசீது பெற்றீர்களா என்றால்

வாங்கவில்லை.அந்த சமயத்தில் வாதிகளிடம் சுவாதீன ரசீது எழுதி பெற்றீர்களா என்றால் இல்லை. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கையொப்பம் செய்ய மாட்டோம் என்று வாதிகள் சொல்லி காலி செய்வதற்கு விடுவதாக சொன்னார்கள் என்று கூறுகிறார்.

9. ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது எந்த ஒரு ஆவணமும் ஏற்படுத்தாமல் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டீர்களா என்றால் சரியல்ல. நான்கு வருடங்களாக தாவா நிலுவையில் இல்லை. என்னுடைய எதிர்வாதத்தின் படி தாவா சொத்தில் உள்ள வீட்டை வாதிகளை காலி செய்வதற்காக ரூ.2,50,000/- பேசப்பட்டதாக கூறுகிறீர்களா என்றால் சரி. ரூ.1,50,000/- கொடுத்தேன். அந்த வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் க.ச.எண்.385/3 இ ல் உள்ளது. அந்த வீட்டிற்கு தனியாக பாதை கிடையாது தாவா சொத்திற்குள் வீடு அமைந்துள்ளது என்றால் தவறு. வீட்டிற்கு தனியாக பாதை உள்ளது. தாவா சொத்தில் கடைசியில் மேற்கோட்டில் வடபுறமாக பாதை உள்ளது.

10. மேற்கோட்டில் வீடு உள்ளதா என்றால் மேற்கோட்டில் இருந்து 20 அடி சென்றால் வீடு உள்ளது. தாவா சொத்திற்கு எந்த பக்கம் பாதை என்றால் க.ச.எண்.385/3 இ சொத்தின் வடபுறமாக பாதை உள்ளது. க.ச.எண்.385/3 இ சொத்திற்கு வடபுறத்தில் கிழமேலாக ஒரே ஒரு பாதை தான் உள்ளது என்றால் சரி. அந்தப் பாதை வழியாகத்தான் க.ச.எண்.385/3 இ மற்றும் க.ச.எண்.386 சொத்துக்களுக்கு செல்ல முடியும் என்றால் சரி. க.ச.எண்.385/3 இ

சொத்துக்கு வடபுறம் யாருடைய சொத்து என்றால் தெரியாது. தாவா சொத்துக்களில் நான்கு புறத்திலும் யாருடைய சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். யாருடைய சொத்துக்கள் உள்ளது என்றால் கிழக்குபுறமாக வருண் தோட்டம், மேற்கு புறம் பரமேஸ் தோட்டம், பின்புறமாக தமிழ் தாய் நிலம் உள்ளது.

11. க.ச.எண்.385/3 பி1 தாவா சொத்திற்கு வடபுறமாக உள்ளது என்றால் தெரியாது. வடபுறமாக க.ச.எண்.385/3 சி சொத்து உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எங்கு அமைந்துள்ளது என்பதே எனக்கு தெரியாது என்றால் தவறு. வருண் மற்றும் பரமேஸ் ஆகியோர்களை சாட்சியாக விசாரிக்க உள்ளீர்களா என்றால் எனக்கு விசாரிக்க வேண்டிய தேவையில்லை. தாவா சொத்துக்களை 1,2 வாதிகள் கிரயம் பெற்ற தேதியிலிருந்து 1999 ஆம் வருடத்தில் இருந்து தொடர்ச்சியாக சுவாதின அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் தவறு. தாவா சொத்தை பொருத்து கடன் வாங்கி தருவதாகவும் அபிவிருத்தி செய்வதற்காக பொய்யான பொது அதிகார ஆவணத்தை 1,2 வாதிகளிடம் 1,2 பிரதிவாதிகள் பெற்றார்கள் என்றால் தவறு. அவ்வாறு ஏற்பட்ட பொது அதிகார ஆவணத்தை ஒன்னு ரெண்டு வாதிகள் 14.02.2002 ஆம் தேதி சர்டிபிகேட் போஸ்டிங் இன் மூலம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் தவறு.

12. ரத்து செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில்ரத்து செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் சண்முகம் முருகானந்தம் பெயருக்கு 23.07.2002 இரண்டு கிரைய ஆவணங்கள்

ஏற்படுத்தி உள்ளது செல்லாது என்றால் தவறு. தாவா சொத்துக்களை பொறுத்து முருகானந்தத்திற்கு உரிமையே ஏற்படவில்லை என்பதால் அவர் நாகவிஜய்க்கு 28.9.2006 ஆம் தேதி ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் செல்லாது என்றால் தவறு.

13. அவ்வாறு நாகவிஜய் கிரயம் பெற்ற சொத்துக்களை நாகவிஜய் எனக்கு 30.06.2017 தேதி விற்பனை செய்த கிரைய ஆவணமும் செல்லாது என்றால் தவறு. நாகவிஜய் பெயரில் கிரையஆவணம் ஏற்படும் வரை தாவா சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் இபி பெயர் ஆகியவை 1, 2 வாதிகள் பெயரில் தான் இருந்து வந்தது என்றால் தவறு. நாகவிஜய் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக சொன்ன பிறகுதான் வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் தயார் செய்து உள்ளீர்கள் என்றால் தவறு. தாவா சொத்துக்களை சண்முகம் முருகானந்தத்திற்கு சுவாதினடம் கொடுக்கவில்லை, முருகானந்தம் நாகவிஜய்க்கு சுவாதீனம் கொடுக்கவில்லை, நாகவிஜய் எனக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால் தவறு.

14. சண்முகம் முருகானந்தத்திற்கு ஏற்படுத்தியதாக சொல்லும் கிரையாவணத்தின் படி தாவா சொத்தின் கொடுக்கப்படவில்லை மணிவண்ணன், உஷா தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் தவறு. வாதிகள் தாவா சொத்தில் நாய்களை வைத்து பராமரித்து வந்தார்கள் என்றால் இரண்டு நாய்கள் வைத்திருந்தார்கள். இப்போது போய் பார்த்தால் நாய்கள் எத்தனை வைத்துள்ளார்கள் என்பது தெரியும் என்றால்

தெரியும். ஆனால் அப்படி எதுவும் அங்கு இல்லை. தாவா சொத்தின் அமைப்புகள் மற்றும் அங்கு என்ன உள்ளது என்பதே தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தை பொருத்து நாக விஜய் பெயரில் பட்டா மாற்றம் செய்வது தவறு என்று மணிவண்ணன் வருவாய் அதிகாரிகளிடம் மனு கொடுத்து இருந்தார் என்றால் ஆமாம். 2025 ஆம் வருடம் கிராம நிர்வாக அலுவலர் விசாரணை மேற்கொண்டு தாவா சொத்தில் மணிவண்ணன், உஷா சுவாதீனத்தில் இருப்பதாக அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.

15. தாவா சொத்துக்களில் வாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளார்கள் நான் சுவாதீனத்தில் உள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வீட்டில் அத்துமீறி வாதிகள் நுழைந்து விட்டதாக சாட்சி தன்னிச்சியாக முன்வந்து கூறுகிறார். வீடு தாவா சொத்தில் தான் அமைந்துள்ளது, வீடும் தாவா சொத்தும் ஒன்றுதான் என்றால் தாவா சொத்தில் வீடு உள்ளது, அது தனித்து ஒருபுறமாக உள்ளது. தாவா சொத்துக்குள் நுழையாமல் வீட்டிற்கு நேரடியாக போக முடியாது என்றால் தவறு. நேரடியாக வீட்டிற்கு செல்ல முடியும். க.ச.எண்.385/3 இ சொத்திற்குள் வந்து மேல்புறமாக சென்று தான் வீட்டிற்கு செல்லமுயும் என்றால் சரியல்ல. கிழேல் ரோட்டில் க.ச.எண்.385/3 இ சொத்தின் மேல்கோட்டு கடைசியாக உள்ளே நுழைந்து வீட்டை அடைய முடியும். வடபுறத்தில் இருந்து தெற்கு நோக்கி வரவேண்டும் என்றால் ஆமாம். அதன் பிறகு மேற்கு திரும்ப வேண்டும் என்றால் ஆமாம். அதனால் தாவா சொத்து வீடு ஆகியவை வாதியின் சுவாதினத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வீட்டில் அத்துமீறி உள்ள நுழைந்துள்ளார். அத்து மீறி

வாதிகள் வீட்டில் உள்ளே நுழைந்ததாக சொல்வது அனைத்தும் பொய் என்றால் தவறு. ரவிச்சந்திரன் என்பவர் எனக்கு வேண்டியவர் என்றால் என்னுடைய மேலாளர். தோட்டத்தை பார்த்து வருகிறார்.

16. ரவிச்சந்திரன் மூலமாக வாதிகள் பெயரில் குற்ற புகார் கொடுத்தீர்கள் என்றால் ஆமாம். என்னுடைய சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லும் சொத்தில் உள்ள பொருட்களை எடுத்து சென்றதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த புகாரை விசாரணை மேற்கொண்ட அதிகாரி அம்மாதிரி சம்பவம் நடைபெறவில்லை வாதிகள் சொத்துக்களில் சுவாதினத்தில் உள்ளார்கள் என்று குறிப்பிட்டு புகாரை முடித்து வைத்தார் என்றால் சரியல்ல. தவறாக சாட்சியம் அளிக்கிறேன். அந்த புகார் RCS செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளேன். மேல்முறையீட்டு விவரங்களை முதல் விசாரணை வாக்குமூலத்தில் மூலம் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. தற்போது தான் அது கோப்பு கெடுக்கப்பட்டுள்ளது.

17. வா.சா.ஆ– 63 RCS உத்தரவு என்றால் ஆமாம். RCS உத்தரவு ஏற்படுத்துவதற்கு முன்பு அதனை எதிர்த்து என்னுடைய மேலாளர் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதைப் பொறுத்து தகவலை எங்களுக்கு கொடுக்கப்படவில்லை. முறையாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு தான் RCS செய்யப்பட்டுள்ளது. தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. ஆகையால் வாதிகள் கோரியுள்ளபடி தாவா செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN
Date: 2026.02.19 18:19:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.